இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

கொரிய குடியரசுக்குச் செல்லும் மீன்பிடித் துறை தொழிலாளர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு

கொரிய குடியரசில் மீன்பிடித் துறையில் வேலை வாய்ப்புக்காக தேர்வு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்காக சிறப்பு பயிற்சி சேவைகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து பத்தரமுல்லை, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 234, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழுவினால் (DPC) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு நிறுவனத்திடம் இருந்து எழுத்துமூல கோரிக்கையுடன் சேர்த்து ரூபா 5,000 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2026.10.26 ஆம் திகதி தொடக்கம் 2026.11.16 ஆம் திகதி வரை SLBFE இன் பெறுகைப் பிரிவில் இருந்து விலைமனு ஆவணங்களைப் பெற முடியும்.

தேவைகள்:

பயிற்சிக் கற்கையின் காலம் : 07 நாட்கள் (படகு – வதிவிடம்)

ஒவ்வொரு குழுவுக்காக பயிற்சியாளர்களின் எண்ணிக்கை – அதிகபட்சம் 50 பேர்

பயிற்சி பின்வரும் தலைப்புகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

நடைமுறை

கடலில் பயன்படுத்தப்படும் சமிக்ஞை முறைமை, கம்பி உபகரணங்களைக் கையாளுதல், கம்பி வலை உபகரணங்களைக் கையாளுதல், கட்டுதல் மற்றும் பற்றவைப்புக் கருவிகள், படகில் கடைப்பிடிக்க வேண்டிய நடத்தை, படகிலுள்ள மின்சார உபகரணங்கள் மற்றும் கடலில் உள்ள அடையாளக் குறிகளை இனங்காணுதல், படகின் பக்கங்களையும் பாகங்களையும் இனங்காணுதல், வலை பழுதுபார்த்தல், மீன்பிடித்தல் (செய்முறை) – பல்வேறு வகையான மீன்பிடி முறைகள், மீன்பிடி வகைகளை இனங்காணுதல், மீன்களைப் பதப்படுத்துதல் மற்றும் கையாளுதல், உயிர்காப்பு (செய்முறைப் பயிற்சி).

கோட்பாடு

மீன் வகைகளை வகைப்படுத்துதல், நன்னீர் மற்றும் உவர்நீர் மீன் வகைகளை இனங்காணுதல், மீன் வளர்ப்பு முறைகள், மீன்பிடி முறைகள், பல்வேறு உபகரணங்களைக் கையாள்வதன் மூலம் மீன்பிடிக்கும் முறைகள், மீன்களைப் பாதுகாக்கும் முறைகள், மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், மாலுமி கப்பல் மற்றும் வழிசெலுத்தல், உயிர்காப்பு (பாதுகாப்பு).

ஏனைய தேவைகள்

1. பயிற்சியில் பங்கேற்கும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் பயிற்சி வழங்கும் நிறுவனம் ஆயுள் காப்புறுதியை வழங்குதல் வேண்டும்.
2. கடலில் மேற்கொள்ளப்படும் பயிற்சியின்போது, அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் தேவையான அறிவுறுத்தல்களுடன் உயிர்காப்பு அங்கிகளை வழங்குதல் வேண்டும்.
3. குறித்த துறையில் குறைந்தது 20 ஆண்டு அனுபவமுள்ள தகைமை பெற்ற மீன்பிடித்துறை பிரதான பயிற்றுநர் ஒருவரையும், அதே துறையில் 15 ஆண்டு அனுபவமுள்ள உதவிப் பயிற்றுநர் ஒருவரையும், செய்முறைப் பயிற்சிகளுக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்களையும் வழங்குதல் வேண்டும்.
4. பயிற்சியாளர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளுடன் கூடிய தங்குமிட வசதிகளை வழங்குதல் வேண்டும்.
5. பயிற்சிக் காலத்தில் உரிய முறையில் மூன்று வேளை உணவு, படுக்கைக்கான தேநீர் மற்றும் ஏனைய பானங்களை வழங்குதல் வேண்டும்.
6. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ், மீன்பிடித்துறை பயிற்சி நிறுவனத்திற்கான செல்லுபடியாகும் பதிவு இருத்தல் வேண்டும்.

விலைமனுவை மூடிய கடித உறையில் "கொரிய குடியரசுக்குச் செல்லும் மீன்பிடித் துறை தொழிலாளர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கல்" என்று குறிப்பிட்டு 2026.11.17 ஆம் திகதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் SLBFE இன் 2ஆவது மாடியில் பெறுகை பிரிவில் இந்த நோக்கத்திற்கான விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது 2026.11.17 ஆம் திகதி மு.ப. 11.00 இற்கு நிறைவடைவதோடு SLBFE இன் 2ஆவது மாடியில் பெறுகை பிரிவில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பத்தரமுல்லை, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 234இல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக, பெறுகை முகாமையாளரை தொடர்புகொள்ளவும்.

திணைக்கள பெறுகைக் குழுவானது (DPC), எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல் எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. அத்துடன், விலைமனு ஆவணங்களைத் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பாக நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்படும் எவ்விதச் செலவுகளையும் மீளச் செலுத்துவதற்கு அது பொறுப்பேற்காது. இது தொடர்பில் திணைக்கள பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

தலைவர்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை
கொஸ்வத்த, பத்தரமுல்லை.
தொடர்பு இல. - 0112864101-105/ 0112887585
இணையதளம்:- www.slbfe.lk